**05.02.2019 அ.வ.எண். 56/2015 வா.த.சா.1 ஷாருமா க/பெ. ஷாஜகான்**

**குறுக்கு விசாரணை**

எனக்கு தற்போது 37 வயதாகிறது. தாவா சொத்து விவரம் பற்றி எனக்கு தெரியும். அதன் கிழக்கு X மேற்கு, வடக்கு X தெற்கு அளவுகள் பற்றி எனக்கு தெரியாது. எனது தகப்பனார் பெயர் அலிஜான் சாயபு ஆகும். எனது தகப்பனார் இறந்த சமயத்தில் எனக்கு 2 வயது அவர் 1982ல் இறந்தார். இந்த வழக்கில் நான் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கில் உள்ள தரப்பினர்களான யாகூப் அலி, சம்ஷத், அயூப் அலி, ஜரினா ஆகியோர் என்னைவிட மூத்தவர்கள் என்று சொன்னால் சரிதான். அலிஜானுக்கும், சோட்டிமா பீவிக்கும் பிறந்தவர்களில் நான்தான் கடைசி மகள் என்று சொன்னால் சரிதான்.

**கற்றறிந்த பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**